முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.165/2004**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 13.03.2024 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.S.Suganiya Sri, B.A.B.L., (Hons),M.L.,PGDAML. அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 13.03.2024 | சாட்சி | வா.சா.2 |
| பெயர் | கமலகண்ணன் | வயது.. | 78 |
| தந்தை பெயர்.. | பாண்டுரங்கன் | கிராமம்.. | புவனகிரி |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை …**

1. 1970 ல் நான் புவனகிரி வர்த்த சங்கத்தின் உரிப்பினர் என்று சொல்லும் நிலையில் அதற்காக அடையாள அட்டை, உரிப்பினர் ரசீது மற்றும் வேறு ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. நான் 2003 ல் புவனகிரி வர்த்த சங்கத்தின் தலைவராக பணிபுரிந்தேன் என்று சொல்லும் நிலையில் 2003 க்கு முன்பு நிர்வாக குழுவில் இருந்ததற்கான ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. 2003 ல் எந்த சங்கத்தில் இருந்து புவனகிரி வர்த்த சங்கம் புதுப்பிக்கப்பட்டது என்றால் வர்த்தக சங்கம் புவனகிரி, அது தொடர்ச்சியாக செயல்பட்டு வந்தது தான். புவனகிரி வர்த்த சங்கத்தின் பதிவு எண். தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. பதிவு செய்யப்பட்ட புவனகிரி வர்த்த சங்கத்தின் சொத்துக்கள் 167 B, C,D,E என்று குறிப்பிட்டு பதிவு செய்யப்பட்டதா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

2. சங்கத்தை பதிவு செய்யும்போது ACP.ரத்தினசுப்பிரமணியன் செயலாளராக செயல்பட்டு வந்த நிலையில் செயலாளரின் பொருப்புகள், அதிகாரம் என்ன என்று பதிவு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது, அது தொடர்ச்சியாக தான் உள்ளது. பதிவு ஆவணத்தில் உள்ள பொறுப்புகள் பற்றி திருத்தங்கள் செய்யும் நிலையில் அதனை மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் அனுமதிக்க மனு கொடுக்க வேண்டும் என்றால் திருத்தங்கள் எதுவும் செய்யவில்லை. ACP.ரத்தினசுப்பிரமணியன் செயலாராக இருந்த காலத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டதால் அவருக்கு அதிகாரம் இல்லாத நிலையில் எதிர் தரப்பில் கட்சி செய்வதால் வாதிக்கு ஆதரவாக பொய்

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தலைவர் என்ற முறையில் நானோ அல்லது நிர்வாக குழுவோ ACP.ரத்தினசுப்பிரமணியனுக்கு வழக்கு தாக்கல் செய்வதற்கு அதிகாரம் கொடுத்திருந்தால் அவர் அந்த விவரத்தை வழக்குரையில் சொல்லியிருப்பார் என்றாலும், அவ்வாறு அதிகாரம் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

3. 1ம் பிரதிவாதி குடியிருக்கும் வீடு மற்றும் பிரிண்டிங் பிரஸ் கீலகமாக உள்ளது என்று சொல்லியநிலையில் அது எப்போதில் இருந்து கீலகமாக தொடங்கியது என்றால் சுமார் 5 வருடத்திற்கு முன்பில் இருந்து படிபடியாக கீலகமாக தொடங்கியது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு கீலகமாக இருந்தது என்றால் இல்லை. அந்த விவரத்தினை என்னுடை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. கன்னிகா பரமேஸ்வரி மண்டபத்தில் இந்த சங்கம் எத்தனை ஆண்டுகளாக இயங்குகிறது என்றால் சுமார் 6 -7 வருடங்களாக. சங்கம் இருப்பிடத்தை மாற்றும் போது பதிவாளருக்கு மாற்றபட்ட விவரங்களை தெரிவிக்கவேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சங்கம் மாற்றி அமைக்கப்பட்ட இடத்தை குறித்து பதிவாளருக்கு தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

4. சங்கம் இயங்கி வரும் கட்டிடத்திற்கு வாடகை ரசீது எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை. 1985 ல் ஸ்ரீராமன் புவனகிரி காவல் நிலையத்தில் குற்ற எண்.68/1985 என்ற வழக்கு தொடர்ந்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த புகாரில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் புகாரில் பின்னிட்டு என் பெயர் சேர்த்தது எனக்கு தெரியும். அந்த புகாரில் முதல் நபர் கலியபெருமாள், 2ம் நபர் ஏ.கே.ராமசாமி, 3ம் நபர் வீரராம செட்டியார் 4ம் நபர் லட்சுமணசெட்டியார், 5ம் நபர் நான், 6ம் நபர் ராஜேந்திர பிராசாத், 7ம் நபர் சேதுராமன் ஆகியோர் ஸ்ரீராமனின் பிரிண்டிங் பிரஸ் மற்றும் வீட்டில் உள்ள பொருட்களை அடித்து சேதபடுத்தியதாகவும் பொருட்களை தெருவில் வைத்தும் சங்க ஆவணங்களை திருடி சென்று விட்டதாவும் புகார் கொடுத்துள்ளார் என்றால் அதில் உள்ள அம்சங்கள் தவறு ஆனால் மேலே குறிப்பிட்ட 7 நபர்கள் மீது தான் புகார் கொடுக்கப்பட்டது.

5. ஸ்ரீராமனின் தந்தை ரங்கநாதன் பிள்ளை அவர் தான் தலைவர் என்று அவர் பொருப்பில் தான் சங்க சொத்துக்கள் இருந்ததாகவும், அவரை துராக்கிரமாக மேற்படி நபர்கள் அப்புரபடுத்த முயற்சித்ததால் தனக்கு அந்த சொத்தில் அனுபவ உரிமையை விளம்புகை செய்வதற்காக OS.15/1985 வழக்கு தாக்கல் செய்தார் என்ற விவரம் எனக்க தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. OS.15/1985 வழக்கில் ஸ்ரீராமன் தானாகவே வெளியேறிவிட்டார் என்ற அந்த வழக்கு நாங்கள் கட்சி செய்துள்ளோம் என்றால் இல்லை, வயது முதிர்வு காரணமாக சரியாக எனக்கு ஞாபகம் இல்லை.

6. OS.15/1985 வழக்கில் ரங்கநாதன் பிள்ளை தான் பிரஸ் நடத்துவதாக நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையின் விவரம் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. புவனகிரி வர்த்த சங்கம் செயல் படுவதற்கு ஆடிட்டிங் ரிப்போர்ட் தாக்கல் செய்தோமா என்றால் 2003 க்கு பிறகு எப்போது ஆடிட்டிங் ரிப்போர்ட் தாக்கல் என்ற விவரம் எனக்கு ஞாபகம் இல்லை. என் தலைமையில் சங்கம் இயங்கி வருகிறது என்பதை காண்பிக்க எந்த தேதியில் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது என்றால் ஒவ்வொரு வருடமும் General body meeting நடத்தப்படும் எந்த தேதி என்று குறிப்பிட்டு ஞாபகம் இல்லை. ஸ்ரீராமன் பெயரில் சொத்து வரி செலுத்திவரும் நிலையில் சொத்து வரி சங்கத்தின் பெயரில் மாற்றம் செய்ய ஏதேனும் நடவடிக்கை எடுத்தோமா என்றால் நடவடிக்கை எடுததோம்,சொத்து வரி ரசீது தற்போது புவனகிரி வர்த்த சங்கத்தின் பெயரில் தான் உள்ளது, அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல்செய்துள்ளோம்.

7. எங்களுடைய சங்கத்தின் பெயர் புவனகிரி வர்த்த சங்கம் என்றால் சரிதான். 1939 ல் புவனகிரி வர்த்த சங்கம், புவனகிரி என்ற பெயரில் தான் தொடங்கப்பட்டது என்றால் சரிதான் அதை பற்றி எனக்கு தெரியும். எங்கள் பதிவு சங்கத்திற்கு முன்பு இருந்த சங்கம் 29/1976 பதிவு எண். கொண்ட சங்கம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பதிவு எண்.29/1976 செயல்படாத காரணத்தினால் அரசாங்கத்தால் கலைக்கப்பட்டது என்றால் தெரியாது. சங்கத்தை பத்து வருடம் தாண்டி புதுப்பிக்க முடியாது என்றால் ஞாபகம் இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் எங்கள் சங்கத்தை பொறுத்து பிறப்பித்த உத்தரவு தெரியுமா என்றால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்று தெரியும் ஆனால் என்ன உத்தரவு என்று தெரியாது.

8. உண்மையான சங்கம் அதன் சொத்துக்களை ஸ்ரீராமனிடம் இருந்து நீதிமன்றம் மூலம் பெறலாம் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது தெரியுமா என்றால் தெரியும், எங்கள் சங்கமான புவனகிரி வர்த்த சங்கம் தான் உண்மையானது என்று நீதிமன்றத்தில் இருந்து விளம்புகை பெற்றுள்ளோமா என்றால் பெற்றுள்ளோம். 1939 ல் துவங்கப்பட்ட புவனகிரி வர்த்த சங்கத்தின் தலைவராக ஸ்ரீராமனின் தந்தை ரங்கநாதன்பிள்ளை அவருடைய ஆயுள்காலம் வரை தலைவராக இருந்தார் என்றும் அவருடைய இறப்பிற்கு பிறகு ஸ்ரீராமன் தான் தலைவராக இருக்கிறார் என்று ஸ்ரீராமன் கட்சி செய்துள்ளார் என்றால் தெரியும் ஆனால் அந்த கட்சி தவறானது அவர் இறக்கும் வரை அவர் தலைவராக இருக்கவில்லை தொடர்ந்து 3 கூட்டத்திற்கு அவர் வராதகாரணத்தினால் By law படி தானாகவே தலைவர் பொறுப்பில் இருந்து விலகி கொண்டார்.

9. ரங்கநாதன்பிள்ளையிடம் இருந்து ஆவணங்களை பெறுவதற்கு சங்கம் மூலம் அறிவிப்பு கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை, குப்புசாமி செட்டியாரிடம் தான்

ரங்கநாதன்பிள்ளை அனைத்து ஆவணங்களையும் கொடுத்தார் அவரிடம் இருந்தது தான் சங்கத்திறகு கொடுக்கப்பட்டது. இந்த விவரம் ACP.ரத்தினசுப்பிரமணியன், செயலாளருக்கு தெரியுமா என்றால் தெரியும். குப்புசாமி செட்டியாரிடம் இருந்து ACP.ரத்தினசுப்பிரமணியன் தான் ஆவணங்களை பெற்றார் என்றால் இல்லை அப்போது இருந்து செயலாளர் ஏ.கே.ராமசாமியிடம் தான் ஆவணங்கள் கொடுக்கப்பட்டது. ஏ.கே.ராமசாமி எங்கள் சங்கம் புதுப்பிக்கப்பட்டபோது யாரிடம் அந்த ஆவணங்களை ஒப்படைத்தார் என்றால் புதுப்பிக்கப்பட்ட சங்கத்திற்கும் ஏ.கே.ராமசாமி தான் செயலாராக இருந்தார் அதனால் அவரிடம் தான் ஆவணங்கள் இருந்தன.

10. சங்கம் புதுப்பிக்கப்படவில்லை என்றாலும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பிறகு நாங்கள் சங்கம் புதுப்பிக்கப்பட்டதாக கட்சி செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. 1985 முதல் எங்களால் உடைக்கப்பட்ட பிறகு ஸ்ரீராமன் இருக்கும் இடம் கீலகமானது என்றால் தவறு. 1985 க்கு பிறகு வழக்கு தாக்கல் செய்கின்ற வரையிலும் ஸ்ரீராமன் ரிப்பேர் செய்ய முன்வரும் போது நாங்கள் தான் தடுத்துநிறுத்தினோமா என்றால் இல்லை. அப்போது ஸ்ரீராமன் நாளைய தினம் ரிப்பேர் செய்து கொள்ளலாமா என்றால் 2003 க்கு பிறகு வழக்கு நிலுவையில் இருப்பதால் இருதரப்பினராலும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதுசம்மந்தமாக எனக்கும் ஸ்ரீராமனக்கும் ரிப்பேர் செய்வது சம்மந்தமாக ஏதாவது ஒப்பந்தம் உள்ளதா என்றால் அவ்வாறு எதுவும் இல்லை.

11. எங்கள் சங்கத்தில் செயலாளர், தலைவர், பொருளாலர் ஆகியோர் 1939 ல் தொடங்கப்பட்ட சங்கத்தின் விதிபடி தேர்ந்தேடுக்கவில்லை என்றால் 1939 ல் ஏற்படுத்தப்பட்ட விதிகள் பற்றி எனக்கு ஞாபகம் இல்லை, அப்போது நான் பிறக்கவில்லை. நான் தலைவராக தேர்வு செய்வதற்கு என்னை யார் முன்மொழிந்தார் என்றால் ஞாபகம் இல்லை, mintues book நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. செயலாளர் என்பவர் சங்கசொத்தின் உரிமைகோரி எந்த வழக்கும் தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. எங்கள் சங்கம் புவனகிரி வர்த்த சங்கம் என்ற பெயரில் இயங்கவில்லை என்றால் சரியல்ல. அந்த சங்கத்திற்கு இந்த வழக்கு சொத்தின் மீது எந்தவிதமான உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. ACP.ரத்தினசுப்பிரமணியன் அறிவுறுத்தலின் பெயரில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு 11ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை..**

1ம் பிரதிவாதி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை :   -இல்லை-**

| |
|---|
| Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.<br><br>Sd/-S.Suganiya Sri,<br>Principal District Munsif (FAC)<br>Chidambaram. |